செ.வெ.எண்:- 650 நாள் 30.10.12

# தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்
# ஜெ.ஜெ.நகர் கோட்டம்

தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஜெ.ஜெ.நகர் கோட்டப் பிரிவில், காலி மனை மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீடுதாரர்களுக்கு அளித்துள்ள அரசு சலுகையின் அறிவிப்பு

*****

ஜெ.ஜெ.நகர் கோட்டத்தால் முகப்பேர் கிழக்கு, முகப்பேர் மேற்கு, நொளம்பூர் பகுதி I மற்றும் II, முகப்பேர் ஏரி, அம்பத்தூர் பகுதி I, II மற்றும் III, திருமுல்லைவாயில் மற்றும் ஆவடி திட்டப்பகுதிகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலி மனை, அடுக்குமாடி குடியிருப்புகளின் ஒதுக்கீடுதாரர்களுக்கு அரசு சிறப்பு சலுகை வழங்கியுள்ளது.

இதுகுறித்து ஜெ.ஜெ.நகர் கோட்ட செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் கூறியதாவது.

ஜெ.ஜெ.நகர் கோட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடுதாரர்கள் மாதந்திர தவணைத் தொகையினை செலுத்த தவறியதற்கான அபராத வட்டி தள்ளுபடி, வட்டி முதலாக்கத்தின் மீதான வட்டி தள்ளுபடி, நிலத்தின் இறுதி மதிப்பீடு வேறுபாட்டின் பேரிலான வட்டியில் ஒவ்வொரு ஆண்டுக்கும் 5 மாத வட்டி தள்ளுபடி செய்து அரசு ஆணையினை வெளியிட்டுள்ளது.

அதன்படி, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஜெ.ஜெ.நகர் கோட்டத்திற்குட்பட்ட ஒதுக்கீடுதாரர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை அரசு ஆணை வெளியிடப்பட்ட நாளான 28.09.2012–ல் இருந்து 27.03.2013 வரை 6 மாத காலத்திற்குள் ஒரே தவணையாகவோ அல்லது நிலுவையில் உள்ள அசல் தொகைக்கு நடைமுறையில் உள்ள தனி வட்டியுடன் 3 தவணைகளிலோ தொகையினை செலுத்துவதற்கு விருப்புரிமை அளிக்கபட்டது.

தமிழக அரசு அளித்துள்ள இந்த சிறப்புச் சலுகையினை விற்பனைப் பத்திரம் பெறாத ஒதுக்கீட்டாளர்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு தாங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையினை ஜெ.ஜெ.நகர் கோட்ட அலுவலகத்தில் செலுத்தி விரைவில் அனைத்து ஒதுக்கீடுதாரர்களும் விற்பனைப் பத்திரம் பெற்றுக் கொள்ளலாம் என்று ஜெ.ஜெ.நகர் கோட்டம் செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

25/10/12

Tamilnadu Housing Board
J.J. Nagar

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.